# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

மூன்றாம் தவணைப்பரீட்சை - 2018

வரலாறு

தரம் - 09

சுட்டெண் : ........................ நேரம் : இரண்டு மணித்தியாலம்

**கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (×) இடுக.

01) பின்வருவனவற்றுள் ஒல்லாந்தக் கீழைத்தேச வர்த்தக சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு எது?

1) கி.பி 1600 2) கி.பி 1602 3) கி.பி 1668 4) கி.பி 1595

02) இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி யார்?

1) S.W.R.D பண்டாரநாயக்க 3) டட்லி சேனநாயக்க

2) D.S சேனநாயக்க 4) வில்லியம் கோபல்லாவ

03) ஒல்லாந்தர் கீழைத்தேச வர்த்தக சங்கத்தின் தலைமையகத்தை நிறுவிய இடம் எது?

1) கோவா 2) சென்னை 3) பத்தேவியா 4) பாண்டிச்சேரி

04) கி.பி 1766ம் ஆண்டு உடன்படிக்கையின் படி கரையோரம் தொடக்கம் நாட்டின் உட்பகுதியில் ஒரு கவ்வை அளவு ஒல்லாந்தருக்கு உரித்தாகும். ஒரு கவ்வை அளவானது கிலோமீற்றரில்

1) 6Km 2) 4Km 3) 2Km 4) 8Km

05) கி.பி 1848 ஜூலை மாதம் கொங்காலே கொட பண்டா எப்பெயருடன் தம்புள்ளையில் முடிசூடிக் கொண்டான்

1) துரைசாமி 3) புரன் அப்பு

2) கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் 4) ஸ்ரீ விக்கிரம சர்வ சித்தி

06) பசவக்குளம், திசாவாவி, கலாவாவி, கந்தளாய்க்குளம் ஆகிய குளங்களை புனரமைத்த பிரித்தானிய ஆளுநர்

1) ஆதர்கோடன் 3) வில்லியம்ஸ் கிரகெரி

2) ஹென்றிவாட் 4) ஹர் கியூலிஸ் ரொபின்சன்

07) ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் ஆங்கிலேயருக்கு இந்நாட்டில் உரிமையில்லை எனக் கூறி ஆங்கிலேயரின் கொடியை இறக்கி சிங்கக் கொடியை ஏற்றியவர்

1) வாரியப்பொல ஸ்ரீ சுமங்கலதேரர் 3) மீகெட்டுவத்த குணானந்த தேரர்

2) வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கரதேரர் 4) வலானே சித்தார்த்த தேரர்



kalvi.lk

08) இலங்கையில் முதலாவது கைத்தொழில் பேட்டை கி.பி 1959ம் ஆண்டு பின்வரும் எந்த இடத்தில் நிறுவப்பட்டது

1) இரத்மலானை 2) தெல்பிட்டிய 3) ஏக்கலை 4) பேராதனை

09) பேலியகொட வித்தியாலங்கார பிரிவேனாவை நிறுவியவர்

1) ஹிக்கடுவ சுமங்கலதேரர்
2) வலானே சித்தார்த்ததேரர்
3) புளத்கம ஸ்ரீ சுமணதிஸ்ஸதேரர்
4) இரத்மலானை ஸ்ரீ தர்மலோக்கதேரர்

10) கி.பி 1883ம் ஆண்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட அரபிபாஷா அவர்கள் அறிஞர் M.C சித்திலெப்பையின் இஸ்லாமிய மறுமலர்ச்சி நடவடிக்கைகளுக்கு பக்க பலமாக செயற்பட்டார். இவர் எந்த நாட்டில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்?

1) எகிப்து 2) சவுதி அரேபியா 3) துருக்கி 4) பாகிஸ்தான்

11) சிப்பாய்க்கலகம் ஏற்படுவதற்கு காரணியாக அமைந்தது எது?

1) ஆங்கிலேயர் சுதேச பாரம்பரியத்தில் அக்கறை காட்டாது கிறிஸ்தவ சமயம் பரப்பியமை
2) படை வீரர்களிடையில் என்பீல்ட் ரக துப்பாக்கி பயன்படுத்துவதில் ஏற்பட்ட வெறுப்பு
3) ஆங்கிலேயர் இந்தியப் பகுதிகளைக் கைப்பற்ற பின்பற்றிய கொள்கை
4) பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் நடவடிக்கை

12) இந்திய மக்களை அறிவூட்டுவதற்காக கேசரி, மருதம் என்னும் இரண்டு பத்திரிகைகளை வெளியீடு செய்த இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணித் தலைவர்

1) தாதாபாய்நவரோஜி
2) மகாத்மாகாந்தி
3) சுரேந்திரநாத் பெனர்ஜி
4) பாலகங்காதர திலகர்

Education கல்வி

- **13 தொடக்கம் 15 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு "அ" மற்றும் "ஆ" என்னும் நிரல்களைப் பயன்படுத்தி அவற்றின் பொருத்தப்பாட்டிற்கு அமைய சரியான எழுத்தை தொடர்புபடுத்தி பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

13)

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. சுதந்திர இந்தியாவின் முதற்பிரதமர் | A. மகாத்மாகாந்தி |
| 2. தண்டிப்பாத யாத்திரை | B. பாலகங்காதர திலகர் |
| 3. பாகிஸ்தான் நாட்டின் தேசபிதா | C. ஜவகர்லால்நேரு |
| 4. உலக அபிமானி | D. மொகமட் அலி ஜின்னா |

1) BADC 2) DCBA 3) CABD 4) CADB

14)

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. கி.பி 1602 | A. கொர்னேலியஸ் டெகல் |
| 2. கி.பி 1656 | B. ஜோரிஸ் வான் ஸ்பீல் போர்ஜன் |
| 3. கி.பி 1688 | C. கலன் அல்பஸ் |
| 4. கி.பி 1721 | D. ஜெனரல் ஜெராட் ஹல்பட் |

1) BDCA 2) DCBA 3) CABD 4) CADB



kalvi.lk

15) நிரல் "அ" | நிரல் "ஆ"

1. கி.பி 1900ல் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டமை — A. ஆளுநர் மக்கலம்
2. கி.பி 1911 விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டமை — B. ஆளுநர் வெஸ்ட்றிஜ்வே
3. கி.பி 1855 நீர்ப்பாசன நடவடிக்கைகள் பற்றி ஆராய செயற்குழு நியமித்தமை — C. ஆளுநர் ஹர்கியூலிஸ் ரொபின்சன்
4. நீர்ப்பாசனம் தொடர்பில் ஆராய ஆணைக்குழு நியமித்தமை — D. ஆளுநர் ஹென்றிவாட்

1) CDBA  2) BACD  3) BADC  4) ABDC

16) இலங்கையில் பின்வரும் எந்த ஆண்டில் இரண்டு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றது?
1) கி.பி 1952  2) கி.பி 1960  3) கி.பி 1956  4) கி.பி 1965

17) டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் நடைமுறைக்கு வந்த அரசுக்கழகத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?
1) 101  2) 95  3) 61  4) 50

18) இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டவர் யார்?
1) ஹென்றிமேசன்மூர்
2) டி.எஸ் சேனநாயக்க
3) N.M பெரேரா
4) வில்லியம் கோபல்லாவ

19) இலங்கையின் உயர்ந்ததும், இறுதியுமான உச்ச நீதிமன்றத்தின் தலைவர் யார்?
1) பிரதமநீதியரசர்  2) சட்டமாஅதிபர்  3) பிரதமமந்திரி  4) ஜனாதிபதி

20) கலாஓயா, தெதுறுஓயா என்னும் இரு நதிகளின் புராதன வரலாற்று பெயர்கள் முறையே
1) கோணநதி, கதம்பநதி
2) கதம்பநதி, ஜஜ்ஜர நதி
3) கதம்பநதி, கோணநதி
4) கோணநதி, ஜஜ்ஜரநதி

(20× 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களும் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**01) 01 தொடக்கம் 06 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான இடங்கள் இலங்கைப்படத்தில் A-F வரை குறித்துக் காட்டப்பட்டுள்ளது. அக் கூற்றுக்களுக்கு பொருத்தமான எழுத்துக்களையும் அந்த எழுத்துக் குறிக்கும் இடங்களின் பெயர்களையும் உங்களது விடைத்தாளில் குறிப்பிடுக.**


01. ஒல்லாந்தர் கி.பி 1602ல் இலங்கையில் தரையிறங்கிய இடத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்
02. வங்களா விரிகுடாவையும் தென்கிழக்கு ஆசியாவையும் நோக்கி அமைந்திருக்கும் இலங்கையின் இயற்கைத் துறைமுகத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்
03. கி.பி 1848ல் இரண்டாவது சுதந்திர போராட்டத்தின் மத்திய நிலையமாக விளங்கிய இடத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்
04. ஒல்லாந்தரால் கி.பி 1658ல் கைப்பற்றப்பட்ட போர்த்துக்கேயரின் கோட்டையைக் குறிக்கும் எழுத்தும் அந்த இடத்தினைக் குறிக்கும் பெயரும்



kalvi.lk

05. இலங்கையின் கடைசிச் சுதந்திர இராச்சியத்தினைக் குறிக்கும் எழுத்தும் அந்த இடத்தின் பெயரும்

06. கி.பி 1814ம் ஆண்டில் வெஸ்லியன் மிஷனரியால் கட்டப்பட்ட றிச்மண்ட கல்லூரி அமைந்து காணப்படும் இடத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும் (6× 2 = 12 புள்ளிகள்)






kalvi.lk

02)

I. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை A, B, C ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A- குண்டசாலை இளவரசன் என அழைக்கப்பட்ட கண்டி இராச்சிய ஆட்சியாளர்

B- கண்டி இராச்சியத்தில் நாயக்கர் வம்சத்தினரின் ஆட்சியை ஆரம்பித்து வைத்த ஆட்சியாளர்

C- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர பிக்குவிற்கு சங்கராஜா பதவியை வழங்கிய கண்டி இராச்சிய ஆட்சியாளர் (3 புள்ளிகள்)

II. கி.பி 1638ம் ஆண்டின் 2ம் இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையேயான உடன்படிக்கையின் முக்கிய விடயங்கள் நான்கினையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழிருந்த பிரதேசங்கள் முக்கிய மூன்று பிரிவுகளையும் (கொமாண்டரிகள்) குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

03)

I. இலங்கை மீது பிரித்தானியரின் கவனம் திரும்பியமைக்கான காரணிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

II. இலங்கையில் பித்தானியர் ஆட்சியின் போது பின்வரும் வரலாற்று நிகழ்வுகள் இடம்பெற்ற ஆண்டுகள் அல்லது காலப்பகுதிகளை A, B, C, D ஒழுங்கில் குறிப்பிடுக.

A- கரையோரக்கலகம்

B- இரட்டை ஆட்சி

C- முதலாவது சுதந்திரப் போர்

D- இலங்கை சுதந்திரம் அடைந்தமை

(4 புள்ளிகள்)

III. a. கி.பி 1815ல் கைச்சாத்திடப்பட்ட கண்டி ஒப்பந்தத்தில் உறுப்புரைகளின் எண்ணிக்கை எவ்வளவு? (1 புள்ளிகள்)

b. கண்டி ஒப்பந்தத்தில் 2ஆம், 4 ஆம் உறுப்புரைகளில் அடங்கியுள்ள விடயங்களை விளக்குக. (4 புள்ளிகள்)

04)

I. பின்வரும் சமய மறுமலர்ச்சிச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களை A, B, C ஒழுங்குமுறையில் எழுதுக.

A- வெசாக் தினத்தை அரசாங்க விடுமுறையாக்குவதற்கு பாடுபட்டமை

B- உதயபானு என்னும் பத்திரிகையை ஆரம்பித்து இந்து சமயத்தினது மகிமையை மக்களுக்கு உணர்த்தியமை

C- முஸ்லீம் நேசன் என்னும் சஞ்சிகையை வெளியிட்டு முஸ்லீம் மக்களுக்கு அறிவூட்டியமை (3 புள்ளிகள்)

II. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மிஷனரி இயக்கங்கள் நான்கினைப் பெயரிடுக. (4 புள்ளிகள்)

III. சேர் பொன் இராமநாதன் அவர்கள் சமய கலாசார மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)



Education கல்வி அதியாபன
kalvi.lk

05)

I. பின்வரும் அரசியல் யாப்புச் சீர்திருத்த அம்சங்கள் எந்த அரசியல் யாப்புக்கள் மூலம் நடைமுறைக்கு வந்தன என்பதனைக் குறிப்பிடுக.

a- நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை அறிமுகம் செய்யப்பட்டமை

b- சட்டவாக்க சபையில் உத்தியோக சார்புள்ளவர்களை விட உத்தியோகசார்பற்றவர்களின் எண்ணிக்கை முதன் முதலாக அதிகரித்தமை

c- இனவாரி பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டமை (3 புள்ளிகள்)

II. கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தின் விசேட பண்புகள் நான்கினைக் குறிப்பிடு. (4 புள்ளிகள்)

III. a. சோல்பரி அரசியல் யாப்பின் மூலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பாராளு மன்றத்தின் இரு சபைகளும் யாவை? (2 புள்ளிகள்)

b. மேற்கூறப்பட்ட இரு சபைகளுள் ஒன்றைப் பற்றி விளக்குக. (3 புள்ளிகள்)

06)

I. கீழே குறிப்பிடப்படும் ஐரோப்பிய இனத்தவர்கள் இந்தியாவின் கரையோரப் பிரதேசங்களில் நிறுவிக் கொண்ட மத்திய நிலையங்களை A. B. C ஒழுங்கில் புள்ளிக்கோட்டில் எழுதுக.

A. பிரான்சியர் ......................................................

B. போர்த்துக்கேயர் ..............................................

C. ஆங்கிலேயர் .................................................. (3 புள்ளிகள்)

II. இந்தியத் தேசிய சங்கத்தின் மிதவாதத் தலைவர்கள் இருவரையும், தீவிரவாதத் தலைவர்கள் இருவரையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. இந்திய தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் முன்வைத்த கோரிக்கைகள் ஐந்தினைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

07)

I. 1956ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற அரசாங்கத்தின் செயற்பாடுகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

II. சுதந்திரத்தின் பின்னர் 1972ம் ஆண்டு வரை இலங்கையில் பதவி வகித்த பிரதமர்கள் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. a. அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள உரிமைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

b. அடிப்படை மனித உரிமைகள் விடயத்தில் 1972ம் ஆண்டின் யாப்பில் கூறப்படாமல் 1978ம் ஆண்டின் யாப்பில் கூறப்பட்ட விடயத்தினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)



kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457